

S.B. க்ரிஏஷன்ஸ்
அவள
இவன்!?
VARAN

NEWS AGENT
AGENT. KALAI

# ‘அவனா இவன்?’

**நடிகர்கள்**

எஸ். பாலசந்தர் ... குமார்
ரமேஷ் ... கண்ணன்
மாஸ்டர் ஸ்ரீதர் ... வேணு
வி. எஸ். ராகவன் ... ராஜாராம்
செருகளத்தூர் சாமா ... சதானந்தம்
சதன் ... உதறல்
கொட்டாப்புளி ஜெயராமன் ... ப்யூன்
பி. டி. சம்பந்தம் ... வாத்தியார்
வித்வான் வே. இலட்சுமணன் ... இன்ஸ்பெக்டர் ராஜன்

**நடிகைகள்:**

வசந்தி ... ஜமுனா
பேபி பத்மினி ... மீனா
லக்ஷ்மி ராஜம் ... சுமதி
சி. கே. சரஸ்வதி ... பர்வதம்
எஸ். என். லக்ஷ்மி ... அமிர்தவல்லி
திலகம் ராஜகுமாரி ... வள்ளி
சாந்தினி ... பொன்னம்மா

மற்றும்

மாலி, கணபதி பட், என். சி. சக்கரவர்த்தி வாதிராஜ்
எஸ் ஜி. ஈஸ்வர், ஆர். எம். சோமசுந்தரம்,
சி. என். ஷண்முகம், வி. டி. அரசு,
ஜி. ராமதாஸ், என் எஸ் காசிநாதன், ஜெமினி பாலு

கதை எஸ். பாலசந்தர்
வசனம்: வித்வான் வே. லட்சுமணன்
பாடல்கள்: வித்வான் வே. இலட்சுமணன்
சங்கீதம்: எஸ். பாலசந்தர்
பின்னணி பாடியவர்கள்:
பி. சுசிலா, ராதா ஜெயலக்ஷ்மி, ரேணுகா,
எல். ஆர். ஈஸ்வரி. கமலா, சீதா, சதன்.
ஒளிப்பதிவு: வி. கே பி. மணியம்
ஒலிப்பதிவு பாடல்கள்: ஏ. கிருஷ்ணன் பி ஏ.
தயாரிப்பு - டைரக்ஷன்; எஸ். பாலசந்தர்
ஸ்டுடியோ: விஜயா-வாஹினி

கலைமகள் அச்சகம், மதுரை-1.

## கதைச் சுருக்கம்

மீனு: "நானும் வேணுவும் தற்செயலாப் பாத்த ஒரு பயங்கர சம்பவத்தெ அடிப்படையா வெச்சுத்தான் நம்ப பாலசந்தர் சார் இந்தக் கதையையே எழுதியிருக்காரு. ஒரு பெரிய ஆபத்துலேர்ந்து என் அக்கா ஜமுனவெக் காப்பாத்த நானும் வேணுவும் பட்டபாடு அம்மம்மா!"

வேணு: "'எக்ஸ்கர்ஷன்' போய்ட்டு திரும்பி வர்றப்போ, பஸ் டயர் மட்டும் பங்சர் ஆகாமெ இருந்திருந்தா, ஒரு கோரமான உண்மெ யாருக்குமே தெரியாமெ மறெஞ்சு போயிருக்கும்! நல்ல காலம்! மீனுவுக்குத் தாகம் எடுததது! அங்கே போனோம்!! பாத்தோம்!!! பாத்ததெச் சொன்ன, யாராவது நம்பணுமே...!!"

ஜமுன: "நான் கூடத்தான் நம்பலே இல்லெ கொழந்தெங்க ரெண்டு பேரும் பெரிய ஆபத்துலேர்ந்து என்னெக் காப்பாத்தி, என்... கண்ணனோடெ என்னெ வாழ வெக்கறதுககே அப்படித் துடிச்சாங்கங்கற உண்மெ கடைசிவரைக்கும் எனக்கே தெரியலெயே......!"

கண்ணன்; "என்னேயே அடையணும்னு ஆசையோடெ இருந்தவளெ, என்னெ அடியோடெ மறககும் படியாத் தூண்டினேன். அவளும் மனசெக் கல்லாககிக்கிட்டு-என் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடந்தா. அதனலெ அவ வாழ்க்கெப் படகு வேறெ திசையிலெ மாறிப்போக நேர்ந்தது. ஆன, மீனுவும் வேணுவும் அதெ மாத்திடுவாங்கன்னு நான் நெனெக்கவே இல்லெ!"

சுமதி: "நம்பத்தகாதவென நம்பினேன். நய வஞ்சகமான பசப்பு வார்த்தெயிலெ மயஙகினேன். கல்யாணம் ஆகாமலேயே என் கற்பெ அவனுக்குக் காணிக்கை யாக்கினேன.. அதுக்குக் கைம்மாறு அவன் எனககு அளிச்ச பரிசு......?"

குமார்: "'வாழ்க்கை வாழ்வதற்கே! இதுதான் என் கொள்கை. சுமதியெ நேசிச்சேன்! எதுக்காக? சுகத்துக்காக; ஆன, பணம்...? அதுக்குக் கெடெச்சா இன்னெருத்தி. வலிய வர்ற சீதேவியெ உதறித் தள்ளலாமா? ஏத்துக் கொள்ளத் தீர்மானிச்சேன். ஆன தடுத்தா, முதல்லெ வந்தவ!... அவளுக்கு ஒரு முடிவெக் காட்ட நான் தவறின, என் கொள்கை என்ன ஆகறது!..."

பர்வதம்: ''என்னோட குடும்ப அந்தஸ்துக்குப் பொருந்தாத பிள்ளையெ என் பெண் காதலிச்சா, நானா அதெ ஏத்துக்குவேனா? பெண் கேக்க வந்தவங்களுக்கு நல்லாப் பாடம் புகட்டினேன்!... குமார் எப்பேர்ப்பட்ட பிள்ளே!... ஜமுனாவுக்குச் சரியான ஜோடி குமார்தான்னு தீர்மானிச்சேன்! எல்லாம் கூடி வந்தது! ஆனா...?'

ராஜாராம்: ''பர்வதத்தின் பேச்செத் தட்டிப் பேசறது எனக்குப் பழக்கமில்லெ. அதுக்கு எனக்குச் சக்தியும் கெடையாது அவ ஆட்டி வெக்கறபடி ஆடறது என் வாடிக்கெ! அதனாலெ, என்னென்னவெல்லாம் நடந்துட்டுது! ஜமுனாவெப் பாழுங் கிணத்துலேயில்லெ தள்ளறதுக்கு நானும் துணிஞ்சுட்டேன்!''

அமிர்தவல்லி: ''என் கண்மணி ஜமுனா, எங்கே வாழ்க்கெப் பட்டாலும் நல்லா இருக்கணுங்கறதுதான் என் மனப்பூர்வமான ஆசெ. குமாருக்கு வாழ்க்கெப்படவிருந்த அதே மணப்பந்தல்லேயே, என அருமை மகன் கண்ணனுக்கு ஜமுனா வாழ்க்கெத் துணைவி ஆவான்னு நான எதிர்பார்க்கவேயில்லெ?''

சதானந்தம்: ''ஒரு காலத்திலே ஒரே கலயத்திலே கஞ்சி குடிச்சதெ நெனெச்சுக்கிட்டு, புதுப்பணக்காரன் கிட்டெ பழைய பிச்சக்காரன் ஒறவு கொண்டாட நெனச்சா, அவமானந்தானே ஏற்படும்!...அதுக்காக நான் வருத்தப்படவேயில்லெ! எது நடக்கணுமோ அதுதானே நடக்கும்!''

வள்ளி: 'எல்லாருக்கும்தான் காதலன் கெடெக்கறான்! எனக்குக் கெடெச்ச காதலனே ஒரு தனி அவதாரம்! அவரெப் போல ஒரு கோமாளியெப் பாக்க முடியாது. ஆனாலும், அந்தக் கோமாளித்தனத்தெப் பாத்து ரசிக்கறதுலேதானே எனக்கே அவரு மேலே காதல் உண்டாச்சு!''

உதறல்: 'பர்வதம்மா வீட்டுலெ எனக்கு அதிக நாள் வேலெ நீடிக்காதுன்னு நெனெக்கறேன்! உங்களுக்கு யாருக்காவது சமையல்கார 'சாம்பியன்' தேவேன்னா, எனக்குச் சொல்லி—யனுப்ப மறந்துடாதீங்க! ஆனா, ஒரே ஒரு கண்டிஷன்! பாத்திரங்களெ மட்டும ஒண்ணுக்குப் பத்தா வாங்கி வையுங்க!''

பொன்னம்மா ''பர்வதம்மா கை பாத்துப் பொழப்பு நடத்தற வேலெக்காரி நான்! என் மகனதான் வேணு! அவனெ 'என் பிள்ளே'ன்னு சொல்லிக்கறப்போ, நான் அடையற ஆனந்தத்துக்கு அளவே கிடையாது அப்பேர்ப்பட்ட ஒரு பெரிய சாதனையெ, அவனும் மீனாவும் செஞ்சுட்டாங்கயில்லெ!''

வாத்தியார்: ''எத்தனையோ பசங்களுக்கு நான் பாடம் சொல் லிக் கொடுத்திருக்-கேன். மீனுவுக்கும் வேணுவுக்கும் யாருமே நிகரில்லெ! அவங்க அன்-னிக்குப் பாத்ததெ எங்கிட்டெ சொன் னப்போ, நான் அலட்சியம் செஞ்சது என் தப்புதான். கொழந் தெங்க பேச்செ அசட்டெ செய்யக் கூடா-தூங்கற முதல் பாடத்தெ நானே அப்பறம்தான் கத்துக்கும்படியா ஆச்சு!''

ப்யூன்: ''நான்தான் குமார் கம்பெனியிலெ ப்யூன்! அங்கே 'பிஸ்னஸ்' நடக்கற அழவுக்கு, ஒரு ஆபீசே தேவையில்லெ! இந்த லட்சணத்துலெ, ப்யூன் வேறெ! ஆனாலும், இந்த உத்தியோ கத்தெ விட்றதுக்கு நான் தயாரா யில்லெ! ஏன்னா, அப்பறம் வேறெ எடத்துலெ வேலெ கெடைக்குங் றது என்ன நிச்சயம்...!''

இன்ஸ்பெக்டர் ராஜன் ''ஸ்டேஷன்லெ எத்தனையோ கேசு பதிவாகறதுண்டு; நாங்களும் புலன் விசாரிச்சு நடவடிக்கெ எடுக் கறதுண்டு ஆனா, மீனுவும் வேணுவும் எங்களுக்குச் சிரமமே கொடுக்காமெ, ஒரு பெரிய கேசெக் கையும் மெய்யுமாக் கண்டு பிடிச்சுக் கொடுத்தாங்களே, அவங்களுக்கு எவ்வளவு 'தாங்க்ஸ்' சொன்னாலும் தகும்!''

# அவனா இவன்? பாட்டுகள்

## பாட்டு 1

இயற்: வே. இலட்சுமணன் பாடி: பி. சுசிலா

கல்யாணத் திருநாள்!
கன்னி வாழ்வில் ஒரு நாள!!
காதலுக்கே வெற்றி தரும் பெருநாள்!!! (கல்)

காலமெல்லாம் தேடித் தேடி காதல் சந்தையில்
கண்டெடுத்த காளையில்லை எந்தன் காதலர்—பிள்ளைக்
கோலமுதல் கும்மாளமாய்க் கூடி விளையாடி
குங்குமத்தை இட்டவர்தான் எந்தன் காதலர் (கல்)

காதலித்த அன்பர் கையால் தாலி கட்டினால்
கன்னி மனம் மகிழ்வதற்கும் எல்லையில்லையே—எந்த
பேதத்தையும் சுட்டிக்காட்டிப் பிரிக்க நினைத்தால்
பேதை மனம் துடிப்பதற்கும் எல்லையில்லையே (கல்)

ஆடும் ஊஞ்சல் போல நெஞ்சம் ஆட்டம் ஆடுதே
அங்கும் இங்கும் அவர் முகமே தோற்றம் ஆகுதே—உயிர்
கூடு விட்டுக் கூடு பாய்ந்து கூட நினைக்குதே
கொண்ட ஆசை பலித்திடவே கனவு காணுதே (கல்)

## பாட்டு 2

ஆண்டாள் பாசுரம் பாடி: (ராதா) ஜெயலக்ஷ்மி

வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என் எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்.
இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம்
வந்திருந்து என்னை மகள்பேசி—மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்.
மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னை
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி! நான்.

## பாட்டு 3

இயற்: வே. இலட்சுமணன் பாடி: கமலா-எல்' ஆர். ஈஸ்வரி கோஷ்டியினர்.

[சட்டாம்பிள்ளையும் மாணவர்களும்]
மனம் விட்டு...சிரித்திட்டு...
கரம் கொட்டு...இளஞ்சிட்டு...
துயர்விட்டு...மகிழ்ந்திட்டு...
கரம்தட்டு...இளம் மொட்டு (மனம்)
மனம் விட்டு சிரித்திட்டால
மறைந்து ஓடும் துன்பம்தான்
மனம் கெட்டு அழுதிட்டால்
மறைந்து போகும் இன்பம்தான்—சிரித்துப்
பாடும் செல்வம் நீ —அணைத்து
ஆடும் தங்கம் நீ —கனித்து
ஓடும் வைரம் நீ —நினைத்துத்
தேடும் இன்பம் நீ (மனம்)

[வேணு]
தடுத்தாலும் அடித்தாலும் எனக்கு ஜோடி நீதானே
கடுக்காதான் பலருக்கும் கொடுத்து நானும் வந்தேனே
—இனி உன்
கூடவந்து தாளம் போட்டு
கையைக் கொட்டுவேன்—நமக்குப்
பாடம் சொல்லும் வாத்தியாரும்
நம்ம பக்கம் தான்! (மனம்)

## பாட்டு 4

இயற் வே. இலட்சுமணன் பாடி: சதன்-சீதா

உதறல்: வள்.. வள்...வள்ளி...!
வள்...வள்...வள்ளி...!
வள் வள் வள் வள்ளி ஐ லவ்யூ ட்ரூலி—பிளீஸ்

லவ்மீ புல்லி—என் கிட்டே வா வள்ளி
வள்...வள்...வள்...வள்ளி!
ஓ ஸ்வீட்டு டார்லிங்—யுவர்
லுக் என்ன கூலிங்—என்
ஹார்ட்டெத் தொட்டுப் பாரு
பாடும் பாட்டெக் கேளு
பாடும் பாட்டெப் பாரு
ஆ...வள்ளி ஆ...வள்ளி ஆ...வள்ளி!

**வள்ளி:** பாட்டுப்பாடி ஆசைகாட்டி
ஆட்டம் போடும் லூசு மச்சான்
எட்டிப்போயி நில்லு—கையெத்
தொட்டுப் பேசாதே

**உதறல்:** ஓ...பூந்தி லாடு
ஏன் இந்த மூடு
எனக்காருமில்லே ஈடு
என்கிட்டே கிட்டே கிட்டே வந்து ஆடு

**வள்ளி:** கிட்ட வந்து ஆட்டம ஆடி
இஷ்டம் போல பாட்டுப் பாட
கட்டவேணும் கழுத்துலெ தாலி
கொட்ட வேணும் கொட்டுமேளம்

**உதறல்:** கொட்டுமேளம் வேஸ்டு
வேண்டாம் அது காஸ்டு
புரிஞ்சுக்கோ என் டேஸ்டு—நான்
போற பாதை பான்டு
வள்...வள்...வப்...வப்...ஊ...ஓ...வள்ளி...!

## பாட்டு 5

**இயற்:** வே.இலட்சுமணன் **பாடி:** எல். ஆர். ஈஸ்வரி-ரேணுகா

**மீனு:** கல்யாணப் பொண்ணு
கலங்காதே கண்ணு
கல்யாணம் நின்னுச்சு —டுடும் டுடும் டும்

**வேணு:** கல்யாணப் பொண்ணு
கலங்காதே கண்ணு
கல்யாணம் நின்னுச்சு ...டுடும் டுடும் டும்

மீனு: குள்ளநரி மாப்பிளே
கூண்டுமேலே ஏறி
கம்பியெண்ணப்போருன் டுடும் டுடும் டும்
வேணு: கொலெ செஞ்சு வாழநெனெச்சா
மீனு: கடவுளுமே கூலி கொடுப்பார்
வேணு: தலெநெறையப் பாவம் சுமந்தா
மீனு தப்பமுடியாமத் தவிப்பார்
இருவ: உண்மைககு நிச்சயமா
உண்டாகும் ஜெயமே—இதெ
உணராமெ தவறு செஞ்சா
திண்டாட்டமே........ (கல்)
வேணு: கள்ளத்தன மான
காரியங்க செஞ்சா
பள்ளத்துலே விழுவான் ...டுடும் டுடும் டும்
மீனு: மனசிலுள்ள புருசன் உனக்கே
வேணு: மாலெ போட்டுத் தாலி கட்டுவான்
மீனு: மணந்து கொள்ள நெனெச்சவருக்கே
வேணு: மனைவியாகும் காலம் வருமே
இருவ: அலங்காரம் செஞ்சுகிட்டு
அத்தான் கை கோத்துக்கிட்டு (கல்)
அழகாக நடந்திடுவே...கொண்டாட்டமே.

வணக்கம்.

# நவரசம் ததும்பும் நல்ல நாவல்கள்

## நெஞ்சிலே இட்ட நெருப்பு

உள்ளத்தை உருக்கும் காதல் காவியம்

ஆசிரியர்: **சேரன்**  விலை **ரூ 1-50**

## உதிர்ந்த ரோஜா

வாழத்துடித்து, எண்ண மயக்கத்தால் தன் வாழ்வை, தானே பாழாக்கிக் கொண்ட ஓர் ஏகாந்தியின் சோகக் கதை.

ஆசிரியர்: **எம். மோகன்**  விலை **ரூ 1-50**

## உறவும் பிரிவும்

கூடி வாழத்தான் அவர்கள் விரும்பினார்கள். அந்த உடல் இரண்டும் பிரிக்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த உள்ளங்கள்...?

ஆசிரியர்: கவிஞர்: **சுப்பு ஆறுமுகம்**  விலை **ரூ 1-50**

## மனக்கோயில் உனக்காக

பனிமலர் போன்ற தன் இதயக் கோயிலை அவளுக்காக அலங்கரித்து வைத்திருந்தான். அவளை அவன் இதயத்தில் குடியேறுது தடுத்தது மாந்தரல்ல: அதுதான் இரகசியம்.

ஆசிரியர்: நாஞ்சில் **பி.டி.சாமி**  விலை **ரூ 1·50**

Aykan

## ஸ்ரீ மகள் கம்பெனி

122. வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

போன்: 32858 • த.பெ.எண்: 275 • தந்தி: கலாமன்றம்.

கிளைகள்: மதுரை • திருச்சி • கோயமுத்தூர் • பெங்களூர்.